இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 31.07.2026

# கரூர் கயமைக்கு விழுந்த அடி!

**‘ஊரான் வீட்டு நெய்யில உங்க வீட்டுக்கு ஸ்வீட் செய்யாதீங்க’ என்பது முதலமைச்சர் விஜய்யின் புகழ்பெற்ற பொன்மொழி ஆகும். இதைப் பனையூரில் கல்வெட்டாக அடித்து வைத்து பக்கத்தில் அவர் உட்கார்ந்து கொள்ளலாம். ஆனால் அவர் செய்திருப்பது என்ன?**

**தன்னைப் பார்க்க வந்தவர்கள் முட்டி மோதிக் காத்திருப்பதைப் போல ஷூட்டிங் எடுப்பதற்காக... பத்து மணி நேரமாக மக்களைக் காக்க வைத்து, தண்ணீர் தராமல், சோறு போடாமல், பசியாலும் மூச்சுத் திணறலாலும் செத்து விழ வைத்து... 41 உயிர்களைச் சடலம் ஆக்கியவர் தான் இன்று முதலமைச்சர் நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் விஜய்.**

**ஒவ்வொருவராகச் செத்து விழ விழ பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, அவர்கள் உடலுக்குக் கூட மாலை வைக்காமல் ஓடி வந்தவர் தான் விஜய்.**

ஒரு வாரம் கழித்து வீடியோ பேசினார். ஒரு மாதம் கழித்து அந்தக் குடும்பத்தை எல்லாம் சென்னைக்கு ஸ்டார் ஹோட்டலுக்கு அழைத்து வந்து, தனித்தனி அறையில் உட்கார வைத்து தனித்தனியாகப் போய் அழுதார். பணம் கொடுத்தார். படத்துக்கு மார்க்கெட்டிங் செய்வதைப் போல கட்சிக்கு மார்க்கெட்டிங் செய்தார். படத்தைப் பற்றியே தெரியாமல் டிக்கெட் எடுப்பதைப் போல மக்களும் வோட்டுப் போட்டார்கள். படம் பார்த்து விட்டு வெளியே வரும் போது, ‘நல்லா இல்லை, ஏன் தான் போனோம்னு தெரியலை’ என்று சொல்வதைப் போல, ‘விஜய்க்கு தெரியாமல் வோட்டு போட்டு விட்டோம்’ என்று மக்களும் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்.

முதலமைச்சராக வந்து விட்ட விஜய் என்ன செய்கிறார்? தனது டிரஸ் கோட் மாற்றினார். திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களுக்கு பேரை மாற்றிக் கொண்டிருக்கிறார். ‘உயரமான இடத்தில் உட்கார்ந்தால் இன்னும் உயரலாம். 10 ஆவது மாடியில் தனது அறை இருந்தால் டெல்லியை ஆளலாம்’ என்று பதவி பறிபோனவர் சொன்னதை நம்பி தனது அறையை மாற்றிக் கொண்டிருக்கிறார். அடுத்து முக்கியமான வேலையை அவர் செய்து வருகிறார். ‘ஊரான் வீட்டு நெய்யில், தனது வீட்டுக்கு ஸ்வீட் செய்து’ கொண்டிருக்கிறார்.

★ கரூர் சம்பவம் தொடர்பாக உயர்நீதிமன்றத்தால் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டவரை தனது ஆட்சியில் உளவுத்துறை அதிகாரியாக நியமித்துக் கொண்டார்.

★ உள்துறை தனது கைக்கு வந்ததும், கரூர் வட்டாரத்தில் காவல் அதிகாரிகளாக, அலுவலர்களாக இருந்த 19 பேரை தமிழ்நாட்டின் வெவ்வேறு பகுதிக்கு இடமாற்றம் செய்து அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார். சி.பி.ஐ. விசாரித்துவரும் இந்தவழக்கில் மிகமுக்கியமான சாட்சிகள் இவர்கள். இவர்கள் அனைவரையும் ஒட்டுமொத்தமாக மாற்றியது அப்பட்டமான பழிவாங்கும் நடவடிக்கை.

★ **மனித உயிர்கள் ஒவ்வொருவராக இறந்து விழுந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு வருகிறார்கள் என்று தெரிந்ததும் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்றவர் அன்றைய அமைச்சர் கரூர் செந்தில் பாலாஜி. அவரை முடக்குவதற்காக, அச்சுறுத்துவதற்காக, மிரட்டுவதற்காக பல்வேறு பொய்வழக்குகளைப் போட்டு வருகிறார் முதலமைச்சர் விஜய். கரூர் தொடர்பான வழக்கில் செந்தில்பாலாஜியையும் சி.பி.ஐ. விசாரித்துள்ளது. எனவே செந்தில்பாலாஜிக்கு விஜய் செய்வது அனைத்தும் பகிரங்க மிரட்டலே ஆகும்.**

★ **அடுத்து 41 குடும்பங்களையும் அமைதிப்படுத்த அனைவருக்கும் அரசு வேலை என்று அறிவித்த விஜய், கரூருக்கே சென்று அந்தக் குடும்பங்களுக்கு அரசாணைகளை வழங்கி இருக்கிறார். ‘ஊரான் வீட்டு நெய்யில் தன் வீட்டுக்கு ஸ்வீட்’ செய்து கொண்டார். இதைத்தான் இப்போது ரத்து செய்துள்ளது சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை.**

“கருணை அடிப்படையில் வேலை கேட்டுப் பலரும் காத்திருக்கும் போது இவர்களுக்கு மட்டும் எதன் அடிப்படையில் முன்னுரிமை தரப்பட்டது? அரசுப் பேருந்து விபத்துகள், தீ விபத்துகள், சாலை விபத்துக்கள் என தினந்தோறும் நடக்கிறதே? அவர்கள் குடும்பத்தினருக்கும் அரசுப் பணி கேட்டால் என்ன செய்வீர்கள்? அடிக்கடி நடக்கும் பட்டாசு தொழிற்சாலை விபத்துகளில் இறப்பவர் குடும்பமும் அரசுப் பணி கேட்டால் தருவீர்களா? ஏராளமான இளைஞர்கள் அரசுப் பணிக்காகக் காத்திருக்கும் போது இவர்களுக்கு மட்டும் எப்படி கொடுப்பீர்கள்?” என்று கேட்டுள்ளது உயர்நீதிமன்றம். விஜய் பாணியில் சொல்வதாக இருந்தால், ‘நங்கு நங்கு என்று கொட்டி இருக்கிறது’ உயர்நீதிமன்றம்.

இறந்தவர் குடும்பத்தினரிடம், ‘உங்களுக்கு அரசு வேலை தந்துள்ளேன்’ என்று பெருமையோடு சொன்னார் விஜய். ஆனால் நீதிமன்றத்தில் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்றால், ‘சாதாரணமான அரசு வேலையைத் தான் தந்துள்ளோம்’ என்று சொல்லி இருக்கிறார்கள். ‘எந்த அரசுப் பணியும் சாதாரணமானது அல்ல’ என்று உயர்நீதிமன்ற நீதிபதிகள் உச்சந்தலையில் கொட்டி இருக்கிறார்கள். ‘பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு அரசுப் பணி தருவதற்குப் பதிலாக திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் தாருங்கள்’ என்றும் வழிகாட்டி இருக்கிறார்கள் நீதிபதிகள். இதைவிட விஜய் ஆட்சிக்கு சம்மட்டி அடி அடிக்க முடியாது.

**தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவே, வழக்கில் இருந்து தப்பிக்க, தனது தலையைக் காப்பாற்றிக் கொள்ள, தனது மீதான பழியைத் துடைக்க கரூர் குடும்பங்களை வளைக்கப் பார்த்தார் விஜய். ரீல் அறுந்துவிட்டது.**

## ரூ.100 கோடி மதிப்பிலான

# பழனி முருகன் கோவில் நில மோசடி வழக்கு!

## ஒரு மாதத்திற்குப் பின் 4 பேர் கைது!

*திண்டுக்கல், ஜூலை 31-*

*திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பழனி முருகன் கோவிலுக்கு சொந்தமான 100 கோடி ரூபாய் மதிப்பிலான நிலத்தை, போலி ஆவணங்கள் தயாரித்து தற்காலிக சார் பதிவாளர் மூலம் தனிநபர்களுக்கு வெறும் 2 கோடி ரூபாய்க்கு பத்திரப்பதிவு செய்து மெகா மோசடி நடைபெற்றது. இது தொடர்பாக சி.பி.சி.ஐ.டி., காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்நிலையில், இவ்வழக்கில் முதன்முறையாக 4 பேரை சி.பி.சி.ஐ.டி., காவல்துறையினர் கைது செய்துள்ளனர். திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளத்தை சேர்ந்த வெள்ளைத்துரை, திண்டுக்கல் மாவட்டம் பழனியை அடுத்த கவுண்டன்குளம் பகுதியை சேர்ந்த அன்வருதீன், விழுப்புரம் மாவட்டம், சாலாமேடு பகுதியை சேர்ந்த முருகதாஸ் உள்ளிட்ட 4 பேரை கைது செய்துள்ள சி.பி.சி.ஐ.டி., காவல்துறையினர், அவர்கள் மீது 5 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்நிலையில், தவெக அரசின் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷுக்கு தெரியாமல் இந்த முறைகேடு நடந்திருக்க வாய்ப்பில்லை என்ற குற்றச்சாட்டு வலுத்திருக்கிறது.*



மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027இல் விவரங்களை வழங்கிய, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளப் பதிவில், “**Census 2027இல் பங்கெடுத்து விவரங்களை வழங்கினேன். நீங்களும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்கு முழு ஒத்துழைப்பு வழங்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்**” என்று பதிவிட்டுள்ளார்.

## கொள்கையற்ற கவர்ச்சி அரசியல் கூட்டம் உருவாகியுள்ள சூழலில்

# கொள்கைதான் நம் முதன்மை அடையாளம் என்று வழிகாட்டியவர்!

### முதுபெரும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஆர்.நல்லகண்ணு சிலையைத் திறந்துவைத்து உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, ஜூலை 31-**

**“கொள்கையற்ற கவர்ச்சி அரசியல் கூட்டம் உருவாகியுள்ள இந்தக் காலச்சூழலில் கொள்கையும், லட்சியமும்தான் நம் முதன்மை அடையாளம் என்று வழிகாட்டியவர் அய்யா நல்லகண்ணு அவர்கள்” என்று அவரது சிலையைத் திறந்துவைத்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.**

இதுகுறித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

‘உதவும் கைகள் அறக்கட்டளை’ மற்றும் திணை நிலவாசிகள் நாடகக் குழு சார்பில் சென்னை பழைய வண்ணாரப்பேட்டையில் அமைக்கப்பட்டுள்ள முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவர் நல்லகண்ணு அய்யாவின் சிலையை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் அண்ணன் மு.வீரபாண்டியன் அவர்களுடன் இணைந்துதிறந்துவைத்தேன்.



அத்துடன், திணை நிலவாசிகள் நாடகக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் பகு எழுதிய “அம்மாச்சி கற்பனையின் முதல் ஆசிரியர்” நூலையும் வெளியிட்டோம்.

போராட்டக் குணம் நிறைந்த அய்யா நல்லகண்ணு அவர்களுக்கு தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள முதல் சிலையை திறந்து வைத்ததில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

கொள்கையற்ற கவர்ச்சி அரசியல் கூட்டம் உருவாகியுள்ள இந்த காலச்சூழலில், கொள்கையும், லட்சியமும்தான் நம் முதன்மை அடையாளம் என்று வழிகாட்டியவர் அய்யா நல்லகண்ணு அவர்கள்.

அவருடைய வரலாற்றை அடுத்தடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல வேண்டிய தன் அவசியத்தை இவ்விழாவில் குறிப்பிட்டு பேசினோம்.

நல்லக்கண்ணு அய்யாவின் புகழ் ஓங்கட்டும்.

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

## எஸ்.டி.பி.ஐ. கட்சியின் தமிழ்ச் சுடர் சார்பில் – 2026

# சிறந்த ஆளுமைகளுக்கான விருதுகள் வழங்கும் விழா!

### எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநிலத் தலைவர் நெல்லை முபாரக் சிறப்புரை! அச.உமர் பாரூக் தலைமை!

சென்னை, ஜூலை 31-

எஸ்.டி.பி.ஐ. கட்சியின் தமிழ்ச் சுடர் சார்பில் - 2026 சிறந்த ஆளுமைகளுக்கான விருதுகள் வழங்கும் விழா நாளை (1.8.2026 சனிக்கிழமை) மாலை 4:30 மணி அளவில் ரித்தர்டன் ரோடு, புரசைவாக்கம் ஒய்.எம்.சி.ஏ. ஆடிட்டோரியத்தில் நடைபெறுகிறது.

எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநில துணைத் தலைவர், விருது தேர்வுக் குழுத் தலைவர் அச. உமர் பாரூக் தலைமை வகிக்கிறார்.

எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநில பொதுச் செயலாளர் ஏ.அபுபக்கர் சித்திக் வரவேற்புரையாற்றுகிறார்.

மாநில பொதுச் செயலாளர் ஏ.கே.அப்துல் கரீம் தொடக்க உரையாற்றுகிறார்.

மாநில பொதுச் செயலாளர் எஸ்.அகமது நவவி தொகுப்புரை ஆற்றுகிறார்.

விழாவிற்கு டி.இரவிச்சந்திரன், எம்.நிஜாம் முகைதீன், ஏ.எஸ்.ஷபீக் அஹம்மது, எஸ்.நஜ்மா பேகம், பாஸ்டர் வி. மார்க், வழ. அஸ்ஸான் பைஜி, ஏ.முஸ்தபா, எஸ். அமீர் ஹம்சா, டி.ரத்தினம், ஏ.பஷீர் சுல்தான், இ.முஹமது ரஷீத், எஸ். கே.அஸ்கர் அலி, ஜெ.எம். ஹசன் பாபு, கே.பாத்திமா கனி, வழ.ஏ. ராஜா முகமது, எம்.அபுபக்கர் சித்திக், எஸ்.கே.முகம்மது இஸ்மாயில், எஸ். செய்யது அஹமது, எம். பூட்டோ மைதீன், எம். ஒய்.சீனி முஹம்மது, கோல்டு ரஃபிக், எல்.அப்துல் ரசாக், எஸ்.முகமது பிலால், எம்.ஏ.சாதிக், வி.முகமது சலீம், ஆர். எம்.கே.மாலிக், பி.பி.எம். ஜுபைர் அலி, ஐ.ஜாபர் ஷரீப் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் ஜமாத்து இஸ்லாமி ஹிந்த் முன்னாள் தலைவர் எச்.அப்துல் ரகீப்புக்கு கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் விருதும், திரைப்பட நடிகர் சத்யராஜ்க்கு தந்தை பெரியார் விருதும், மொழி உரிமைச் செயல்பாட்டாளர் ஆழி செந்தில்நாதனுக்கு பேரறிஞர் அண்ணா விருதும்,

பிளாக் துலிப் குழும நிறுவனர் முஹம்மது யஹ்யாவுக்கு வணிக மேதை பி.எஸ்.அப்துர் ரஹ்மான் விருதும், பன்னூலாசிரியர் சேயன் இப்ராகிம்க்குகவி கா.மு. ஷெரீப் விருதும், சத்தியபாமா நிகர் நிலை பல்கலைக் கழக வேந்தர் டாக்டர் திருமதி மரியஜீனா ஜான்சனுக்கு கல்வி தந்தை மௌலானா அபுல் கலாம் ஆசாத் விருதும், மொழி அரசியல் ஆய்வாளர் முனைவர் சபூர் அலிக்கு சட்ட மேதை டாக்டர் அம்பேத்கர் விருது எஸ்.டி.பி.ஐ. கட்சியின் தேசிய செயலாளர் ஏ.யாமொய் தீனுக்கு அறிவுக் கடல் சயீத் சாஹிப் விருதும் ஐ.என்.டி.ஜே. நிறுவனர் மர்ஹூம் எஸ்.எம்.பாக்கருக்கு புரட்சியாளர் பழனி பாபா விருதும் யு.ஏ.இ. சமூக செயல்பாட்டாளர் திருமதி ஜாஸ்மின் அபுபக்கருக்கு அன்னை தெரசா விருதும் வழங்கப்படுகிறது.

எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநிலத் தலைவர் நெல்லை முபாரக் விருதுகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

நிறைவாக மாநிலச் செயலாளர் எம்.ஏ.ஹமீத் ஃப்ரோஜ் நன்றி கூறுகிறார்.

## சேலத்தில் வண்டல் மண் என்ற பெயரில்

# 2,500 லோடு கிராவல் மண் வெட்டி கடத்திய த.வெ.க. நிர்வாகி!

சேலம், ஜூலை 31-

சேலம் மாவட்டம் வீரபாண்டி ஒன்றியத்திற்குட்பட்ட பனங்காடு ஆண்டிப் பட்டியில் உள்ள உள்ள ஏரியில் த.வெ.க. நிர்வாகி கடந்த சில நாட்களாக ஏரியில் வண்டல் மண் எடுக்க அனுமதி பெற்றுள்ளதாக கூறி கிராவல் மண்ணை வெட்டி எடுத்து அந்த மண்ணை ரியல் எஸ்டேட் தொழில் செய்பவர்களுக்கு விற்று வந்துள்ளார் இவர் வெட்டி எடுத்த கிராவல் மண் 2,500 லோடு கடத்தியது ஆதார பூர்வமாக வெளிவந்தது.

இந்த நிலையில் ஆண்டிப்பட்டி மக்கள் ஏரியை கிணறு போல தோண்டி விட்டார்கள். இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறையும். இதனால் குடிநீருக்கே ஆபத்து வந்து விட்டது என்று கூறி கிராம மக்கள். வண்டல் மண் எடுத்த டிராக்டரை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். உடனே அந்த இடத்திற்கு தாசில்தார் வட்டார வளர்ச்சி அதிகாரி தனபால் மற்றும் மைன்ஸ் அதிகாரிகள் வந்து விசாரணை நடத்தினர்.

இதையொட்டி மண் எடுப்பதற்கு தடை விதித்தனர். விதியை மீறி த.வெ.க. நிர்வாகி கிராவல் மண்ணை வெட்டி எடுத்தது உறுதி செய்யப்பட்டது.

அதிகாரிகள் த.வெ.க. நிர்வாகிக்கு அபராதம் மட்டும் விதிப்பாரா அல்லது திருட்டுதனமாக கிராவல் மண் எடுத்து விற்பனை செய்ததற்கு கிரிமினல் வழக்கு தொடர போலீசில் புகார் செய்வார்களா?